DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 81/2023

Miscellaneous :

Sessions : DW 1

Deposition of Witness for

| | |
|---|---|
| Name | காமராஜ் |
| Father / Husband Name | செல்லையன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 13.11.2025

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் எத்தனை வருடமாக கான்ட்ராக்டராக வேலை செய்து வருகிறேன் என்றால் 5 வருடம். புகார்தாரர் தனபால் என்பவரை எனக்கு 15 வருடமாக தெரியும். புகார்தாரர் எப்போது உதவி ஆய்வாளராக பணிபுரிந்தார் என்றால் தேதி தெரியவில்லை, சுமார் 10 ஆண்டுக்கு முன்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தார். புகார்தாரர் காவல் ஆய்வாளராக பணி உயர்வு பெற்று ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். புகார்தாரர் வட்டிக்கு விடும் நிறுவனம் நடத்திவருகிறாரா என்றால் இல்லை, மறைமுகமாக செய்து வருகிறார். நான் அவரிடம் கடன் எதுவும் வாங்கவில்லை. புகார்தாரர் கிருஷ்ணன், சோமசுந்தரம், கரீம்பாய், பாஸ்கர் ஆகியோருக்கு எந்தெந்த தேதியில் எவ்வளவு ரூபாய் பணம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது, வட்டியை மட்டும் வாங்கி தர சொல்லுவார். 10 லட்சம் முதல் 50 லட்சம் வரை கடனாக கொடுத்தார் என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் வட்டியை வாங்கி கொடுத்ததன் அடிப்படையில் கூறுகிறேன்.

2. நான் வட்டி வாங்க கொடுத்ததற்கான எழுத்துப்பூர்வமான ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. நான் மேலே சொன்ன 4 நபர்களிடம் வட்டி வசூல் செய்து கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அவ்வாறு செய்திருந்தால் அதற்குரிய ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. என்னை வட்டி வசூல் செய்து தர சொல்லவேண்டிய காரணம் என்ன என்றால் எனக்கு எதிராக ஒரு வழக்கு இருந்தது, அதற்காக சென்றேன், அப்போது என்னை வட்டி வசூல் செய்துவர சொன்னார். எனக்கு எதிராக வழக்கு இருந்தது என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த வழக்கு எந்த வருடம் என்றால் வருடம் ஞாபகமில்லை, சுமார் 10 வருடம் இருக்கும். புகார்தாரருக்கு வேறு என்ன வேலை செய்தேன் என்றால் வட்டி வாங்கி தருவது, எலக்ட்ரிஷன் வேலை, பிளம்பர் வேலை செய்தேன். அவர் எத்தனை ஆண்டுகளாக சட்ரஸ் காவல் நிலையத்தில் இருந்தார் என்றால் 2, 3 ஆண்டுகள் இருந்தார், எந்த ஆண்டு என்று ஞாபகமில்லை. புகார்தாரர் என்னை மிரட்டியதற்கு புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. எதற்காக என்னுடைய காசோலையை புகார்தாரர் வாங்கினார் என்றால் வட்டி

தொகையை நான் எடுத்துக்கொள்ளபோகிறேன் என்று என்னிடம் காசோலை வாங்கினார்.

3. காசோலையை எந்த தேதியில் எங்கு வைத்து வாங்கினார் என்றால் DAE குடியிருப்பு 9 அவன்யூவில் வைத்து கொடுத்தேன். காசோலையை கொடுக்கும்போது நாங்கள் இருவரும் இருந்தோம், புகார்தாரரின் மனைவியும் இருந்தார். புகார்தாரருக்கு நான் அஞ்சி வட்டி வசூல் செய்து கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த பணபரிவர்த்தனை இணையதளம் மூலமோ, வங்கி வாயிலாகவோ நடந்ததா என்றால் இல்லை. புகார்தாரர் எப்போது பணி ஓய்வு பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. புகார்தாரர் வட்டிக்கு பணம் கொடுத்துவந்தார் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யமுடியுமா என்றால் ஆவணம் இல்லை, விசாரித்தால் சொல்வார்கள். புகார்தாரர் என்னுடன் போனில் பேசியதற்கான ரெக்கார்ட் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நான் 09.01.2023 அன்று புகார்தாரருடன் செல்போனில் பேசியபோது உன்னால் எனக்கு 1 லட்சம் நஷ்டம் என்று கூறியதற்கான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

4. காசோலையை வைத்து பொய் வழக்கு தாக்கல் செய்துவிடுவேன் என்று எந்த தேதியில் மிரட்டினார் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு 1 மாதத்திற்கு முன்பு மிரட்டினார், தேதி ஞாபகமில்லை, 2023 ம் வருடம். புகார்தாரர் என்னை மிரட்டியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது, எந்த தேதியில் வந்தது என்று எனக்கு ஞாபகமில்லை. அந்த அறிவிப்பிற்கு நான் பதில் கொடுக்கவில்லை. நான் சொல்லும் விவரங்கள் உண்மையாக இருந்திருந்தால் பதில் கொடுத்திருப்பேன் என்றால் சயில்ல, புகார்தாரர் தான் பதில் கொடுக்கவேண்டாம் என்று சொல்லிவிட்டார். புகார்தாரர் என்னிடம் எந்த தேதியில் பதில் கொடுக்கவேண்டாம் என்று சொன்னார் என்றால் பலமுறை சொன்னார். நான் சொல்வது தவறு என்றாலும், பதில் கொடுக்கவேண்டாம் என்று புகார்தாரர் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து எனக்கு எப்போது சம்மன் வந்தது என்றால் எனக்கு தெரியவில்லை, ஆஜரான தேதி எனக்கு ஞாபகமில்லை.

5. நான் வழக்கறிஞர் மூலம் ஆஜரான பிறகு ஏன் நீதிமன்றத்திற்கு வெளியே ரூ.50,000/-தை கொடுத்தேன் என்றால் வழக்கை வாப்பஸ் வாங்கிக்கொள்வதாக கூறி 50,000/-கேட்டார், நான் வங்கி கணக்கு மூலம் அனுப்பினேன். நான் வழக்கு நடக்கும்போது மேற்கண்ட தொகை கொடுத்திருந்தால் அதை நீதிமன்றத்தில் வைத்து கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்தபிறகு ரூ.50,000/- கொடுத்ததில் இருந்து புகார்தாரருக்கு கடன் தரவேண்டிது தெரியவரும் என்றால் சரியல்ல. நானும் புகார்தாரரும் நீதிமன்றத்தின் வெளியே பேசிக்கொண்டதற்கு சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. நான் புகார்தாருக்கு தரவேண்டிய பணத்திற்கு தான் இந்த வழக்கு காசோலை கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் திட்டமிட்டே காசோலை கொடுத்து மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6. என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலை என்னுடையது தான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. அந்த காசோலையின் வங்கி கணக்கு என் பெயரில் இல்லை. காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை என்று முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல, என்றால் நான்

என்னுடைய முதல் விசாரணையிலேயே சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. என்னுடைய காசோலை திருப்பப்பட்டதால் நான் தண்டிக்கத்தக்கவர் என்றால் சரியல்ல.